1972 ஆகஸ்ட் 22]

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலிருந்து கொண்டு வரப்பட்டு தமிழ் நாட்டில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு மிக அதிகமான சௌகரியங்கள் இங்கு கிடைப்பதாகவும், அவர்கள் தங்களுடைய மாநிலத்திற்குப் போக மறுப்பதாகவும் தெரியவருகிறது. அதைப்பற்றி அரசாங்கம் அறியுமா என்று தெரிய வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அந்தக் கைதிகளுக்காகப் பரிந்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்னும் அதிக வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டார்கள். மேற்கு வங்க அரசு சட்டப்படி என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமோ அவைகளையெல்லாம் கொடுக்கின்றோம் என்று உறுதி அளித்தோம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கும் மேற்கு வங்காளக் கைதிகள் பராமரிப்புக்காகச் செலவாகும் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காள அரசு ஏற்றுக்கொள்கிறது என்று சொன்னேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இப்பொழுது இங்கு இருக்கின்ற கைதிகள் மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர்களா அல்லது பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்மிபுகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

Agricultural Implements

*200 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal with the Government to introduce contract system for the maintenance and repair of the Agricultural Implements ?

வேளாண்மைக் கருவிகள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேளாண்மைக் கருவிகளைப் பராமரித்தல், பழுது பார்த்தல் ஆகிய, பணிகளை முறையாக மேற்கொள்ள ஒப்பந்த முறை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர் : இல்லை.

MR. CHAIRMAN : The time is up, Thiru C. V. Rajagopal. Only one hour is allotted for question-hour.

Hanks of Yarn

* 201. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) total number of hanks of yarn produced by Traditional Charka, Ambar Charka and Textool Charka—categorywise particulars under each year from 1962–63 to 1970-71 ;

(*b*) total number of spinners benefited under each category under each of the above years ;

(*c*) per-capita wages paid per day under each category for the above years ;

(*d*) per-capita hanks produced categorywise per year;

(*e*) split wage paid for, per hank categorywise ; and

(*f*) cotton content in weight per hank categorywise on an average ?

நூல் சிட்டங்கள்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1962-63 முதல் 1970-71 வரை ஆண்டு வாரியாக முறையே கை ராட்டை, அம்பர் ராட்டை, யந்திர ராட்டை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நூல் சிட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(இ) மேற்கண்ட ஒவ்வோர் ஆண்டிலும், ஒவ்வொரு வகையின் கீழும் நூல் நூற்போர் மொத்தம் எத்தனை பேர் பயனடைந்தனர்?

(உ) மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் ஒவ்வொரு வகையின் கீழும் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் எவ்வளவு?

(எ) ஆண்டு ஒன்றுக்கு ஒரு நபர் உற்பத்தி செய்த சிட்டங்களின் எண்ணிக்கையாது ?

(ஐ) சிட்டம் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட ஊதிய வீதம் யாது?

(ஒ) சராசரியாக ஒரு சிட்டத்தில் அடங்கியுள்ள பஞ்சின் எடை யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

512–513 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.